# B

**SL. No. : XX**

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 50 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8

Total No. of Questions : 50 ] [ Total No. of Printed Pages : 8

**CCE RF**
**CCE RR**
**REVISED & UN-REVISED**

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **Code No. : 10-T**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

## Subject : First Language — TAMIL

**( ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Fresh & Regular Repeater )**

ದಿನಾಂಕ : 21. 03. 2019 ] [ Date : 21. 03. 2019

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ–12-30 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-30 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 50-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

## பகுதி - அ

I. ஒரு தொடரில் விடை தருக : 11 × 1 = 11

1. இறைவன் ஆனந்த மாக்கடலாவது எப்போது ?
2. நிலம் என்னும் நல்லாள் யாரைக் கண்டதும் நகுவாள் ?
3. இளையான்குடி மாறர் கறிக்காக எதனைப் பறித்தார் ?
4. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?
5. பசுவின் இயல்பு பற்றி கவிஞர் கூறுவது என்ன ?
6. வள்ளவர் கூறும் புலவர் இயல்பு யாது ?
7. திரு. வி. க சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?
8. இளம் பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இரு வகையினர் யாவர் ?
9. இன்றைய இளைஞன் இடறிவிட வேண்டுவனாக வைரமுத்து கூறுவன யாவை ?
10. இலங்காவியின் அருங்காட்சியத்தில் நாம் காணும் கடல் உயிரினங்கள் யாவை ?
11. பம்பன் இயற்றிய இரண்டு நூல்களின் பெயர்களை எழுதுக.

II. பின்வரும் வினாக்களுக்கு மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 9 × 2 = 18

12. பாண்டிய மன்னன் சிவபெருமானை பிரம்பால் அடித்தது ஏன் ?
13. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக .
14. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியாக வள்ளுவர் கூறுவது யாது ?
15. செய்யுளின் உறுப்புகளை எழுதுக.
16. சங்கத் தலைவி புளிக்குழம்பு சமைக்க மேற்கொண்ட செயல்கள் யாவை ?
17. தீப்பெட்டி ஆபீஸ் பஸ்கள் குழந்தைகளை எவ்வாறு வெளியே தள்ளின ?
18. பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் இந்திப்பயிர் செழிக்கத் தமிழ் நீர்தான் தேவை என கூறக் காரணமென்ன ?

19. சிந்தனையைத் தூண்டும் இரண்டு விடுகதைகளை விடையுடன் எழுதுக.

20. சொற்பொருள் பின்வருநிலையணி என்றால் என்ன ?

III. பின்வரும் வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 9 × 3 = 27

21. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை?

22. வைரமுத்து, இளைஞன் தன்னை எதைப் போன்று வழி நடத்திக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்?

23. கிராமத்துப் பெண்குழந்தைத் தொழிலாளர் பற்றி கி. ராஜநாராயணன் என்ன கூறுகிறார் ?

24. வெண்பாவின் பொது இலக்கணம் கூறுக.

அல்லது

பிறிது மொழிதல் அணியை விளக்குக.

25. அடியின் வகைகளை விளக்குக.

அல்லது

வேற்றுமை அணியை விளக்குக

இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

26. "குழி நிரம்பாத புன்செய் குறும்பயிர் தடவி."

27. "அன்னைக்கு ஆபீஸுக்கு லீவு விடுவாங்களா சார் ?"

28. "எம் தமிழ்ப் பாவையைச் சுமந்து செல்லுங்கள்."

29. "ஞாலம் கருதினும் கை கூடும்."

IV. பின்வரும் வினாக்களுக்கு எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 3 × 4 = 12

30. இக்கோயில் கருங்கல்லால் ஆனதா ! மரத்தாலனதா ! என்று செங்குட்டுவன் வியந்ததன் காரணமென்ன விளக்குக.

*அல்லது*

கிராமத்தின் மாலை நேரக் காட்சிகளை கி. ராஜநாராயணன் வழி நின்று விளக்குக.

31. “இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்” என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியை விவரிக்கவும்.

*அல்லது*

இலட்சியம் குறித்து வைரமுத்து கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

32. சீதை இலங்கையில் இருந்த நிலை பற்றி அனுமன் கூறியன யாவை ?

*அல்லது*

இளையான்குடி மாறன் மனைவியார் சிவனடியாருக்கு அமுது படைக்க மேற்கொண்ட செயல்களை எழுதுக.

V. பின்வரும் பாடலை அடி பிறழாமல் எழுதுக : $1 \times 4 = 4$

33. “பட்டங்கள் ஆள்வதும் ........................” எனவரும் பெண் விடுதலைப் பாடல்.

*அல்லது*

“இனிமைத் தமிழ் மொழி எமது” என வரும் மொழி வாழ்த்துப் பாடல்.

VI. 34. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : $4 \times 1 = 4$

தமிழ் இலக்கிய வானில் முழு நிலவாய் ஒளிவீசும் ஒப்பற்ற நூல் திருக்குறள். டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் முதன் முத ல் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இரஷியஅறிஞர் ‘ யோ டால்ஸ்டாய்’ மற்றும் ஜெர்மனிய அறிஞர் ஆல்பர்ட் சுவைட்டர் போன்றோர் திருக்குறளால் ஈர்க்கப் பெற்றவர்கள் ஆவர். பிரெஞ்சு நாட்டின் தலை சிறந்த எழுத்தாளர் எம். அரியல் தமிழ் இலக்கியத்தில் மிகப் பெரிய சாதனை படைத்த படைப்பிலக்கியம் திருக்குறள் என்று பாராட்டியுள்ளார்.

வினாக்கள் :

i) தமிழ் இலக்கிய வானில் முழு நிலவாய் ஒளிவீசும் நூல் எது ?

ii) திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார் ?

iii) இரஷிய அறிஞர் யார் ?

iv) எம். அரியல் திருக்குறளை எங்கனம் பாராட்டியுள்ளார் ?

## பகுதி - ஆ

VII. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமை பெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

35. மகனை சான்றோன் எனக் கேட்டபோது மனம் மகிழ்பவர் ........................................ .

(A) தந்தை (B) தாய்

(C) அத்தை (D) மாமா.

36. ஐந்து சீர்களைக் கொண்டது ........................................ .

(A) கழிநெடிலடி (B) குறளடி

(C) சிந்தடி (D) நெடிலடி.

37. ஆசிரியப்பாவின் ஓசை ................................ .

(A) செப்பலோசை (B) தகவலோசை

(C) அகவலோசை (D) கூவலோசை.

38. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல் ................................ .

(A) உழிஞை (B) தும்பை

(C) வாகை (D) பாடாண்.

39. முகிலா 'கல கல' எனச் சிரித்தாள். இத்தொடரில் 'கல கல' என்பது .............................. .

(A) இரட்டைக்கிளவி (B) அடுக்குத் தொடர்

(C) ஆகுபெயர் (D) எச்சம்.

40. "பொங்கல் உண்டான்" என்பது ........................................ .

(A) சினையாகுபெயர் (B) பொருளாகு பெயர்

(C) பண்பாகு பெயர் (D) தொழிலாகு பெயர்.

41. ஆகா! என்ன இனிமையான பாடல். இத்தொடர் இவ்வகை வாக்கியம் ......................................... .

(A) வியப்பு வாக்கியம் (B) வினா வாக்கியம்

(C) செய்தி வாக்கியம் (D) கட்டளை வாக்கியம்.

42. கடலும் கடலைச் சார்ந்த இடமும் ......................................... .

(A) குறிஞ்சி (B) முல்லை

(C) மருதம் (D) நெய்தல்.

43. “கடிவேல்” இதில் கடி என்பது ......................................... .

(A) உறுதி (B) கூர்மை

(C) மணம் (D) காப்பு.

44. ‘வெப்சைட்’ - என்பதன் தமிழ் சொல்......................................... .

(A) இணையம் (B) மின்அஞ்சல்

(C) வலைதளம் (D) கணினி.

VIII. தொடர்புபடுத்தி எழுதுக: $4 \times 1 = 4$

45. புல்லால் பர்ணசாலையை

அமைத்தவன் இலக்குவன்

சீதையை நிலத்தோடு பெயர்த்து

எடுத்துக் கொண்டு சென்றவன் ............................

46. சான்றோர் ஆக்குபவன் தந்தை

வேல் வடித்துக் கொடுப்பவன் .................................. .

47. மகளிர் கையில் காய்களைக் கொண்டு விளையாடுவது - அம்மானை.

மகளிர் கைகளைத் தட்டிக் கொண்டு ஆடுவது .................................................. .

48. கவளம் கண்டதும் கரையும் காக்கை

மேகம் மறைத்தாலும் கூவும் ........................................... .

## பகுதி - இ

IX. 49. நீவிர் வாழும் பகுதியில் உள்ள மதுக்கடையை நீக்கக் கோரி காவல் துறை அதிகாரிக்கு ஒரு கடிதம் வரைக, . 1 × 5 = 5

*அல்லது*

உம் பள்ளியில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியைக் காண வருமாறு உன் நண்பனுக்குக் கடிதம் வரைக.

X. 50. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை எழுதுக: 1 × 5 = 5

அ. கணினி விளையாட்டுகளால் கவனம் சிதறும் சிறுவர்கள்

ஆ. பட்டாசுப் புகையால் உண்டாகும் தீமைகள்

இ. உனக்குப் பிடித்த கதையும் காரணமும்.